தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 14/பேரூ/2021

நாள் 03.12.2021

திரு. M. ராஜசேகரன்,
பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
P.வேலூர் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி, கதவு எண்.27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவரின் 24.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2019ல் பெறப்பட்டு, 14/2020என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் பேரூராட்சி, கதவு எண்.27/8 கிழக்குத் தெரு, பொத்தனூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. ராஜசேகரன் என்பவர் தமது 24.12.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட உயர்நிலைப் பள்ளி சாலையில் இயங்கிவரும் ஆர்.எஸ். மெடிக்கல் சென்டர் கட்டிடம் மக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் அதற்கு நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்படவேண்டும் என்றும், மேலும் மருத்துவமனை இயங்கும் கட்டிடங்கள் மக்கள் பயன்படுத்தக்கூடிய இடமென்பதால், தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965, பிரிவு 2(8)ன்படி (Section 2(8) of the Tamil Nadu Public Buildings (Licensing) Act 1965) அதற்கு முறையாக உரிமம் பெற்று, முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பதும் அவசியமாகுமென்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், திருமலையான் காம்ளெக்ஸ் என்ற கட்டிடத்தில் நாவலடி

ஆர்த்தோ கேர் மையம் என்ற மருத்துவமனையும் மற்றொரு மருத்துவரால் நடத்தப்பட்டு இயங்கி வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டிடத்தில் பல்கலைக்கழக பயிற்சி மையம் (Study centre), டீ கடை, அழகு நிலையம் (Beauty parlour) ஆகியவைகளும் இயங்கிவருவதால், அக்கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறப்படவேண்டுமென்றும், ஆனால் நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி இல்லாமலேயே மேற்படி மருத்துவமனைகள் இயங்கும் கட்டிடங்களை P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தொடர்ந்து இயங்க அனுமதித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். மேலும், மருத்துவமனைகளில் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களிடமிருந்து தொழில்வரியும் P.வேலூர் பேரூராட்சியால் முறையாக வசூல் செய்யப்படவில்லை என்பதால், பேரூராட்சிக்கு தொடர்ந்து நிதி இழப்பு ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், R.S.மெடிக்கல் சென்டர் மற்றும் திருமலையான் காம்ளெக்ஸ் ஆகிய இரண்டுக்கும் வணிக ரீதியிலான சொத்து வரி விதிப்பு எண்.4198 மூலம் பொதுவாக விதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15ல் திருவாளர்கள் A. ஜெகன்நாதன், த/பெ ஆறுமுகம், கதவு எண்.52/24, (2) திரு. ராஜேந்திரன், த/பெ ராமசாமி, கதவு எண்.50/26, (3) திரு. மாரிமுத்து, த/பெ திரு. ஆறுமுகம், கதவு எண்.56/24, (4) திரு. கருணாநிதி, த/பெ திரு. ஆறுமுகம், கதவு எண்.54/24D (5) திரு. கனகசுந்தரம், த/பெ ஆறுமுகம், கதவு எண்.62/188 ஆகிய குடியிருப்புகளுக்கு வீட்டுவரி முறைகேடாக வீட்டு உரிமையாளர்கள் இல்லாமலேயே மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார். எனவே, உரிய அனுமதி இல்லாமல் P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் R.S.மெடிக்கல் சென்டர் மற்றும் திருமலையான் காம்ளெக்ஸ் ஆகிய இரண்டு கட்டிடங்களையும் உடனடியாக இடித்திடவும், முறையான அனுமதியின்றி மேற்படி கட்டிடங்களில் மருத்துவமனைகளை இயங்க அனுமதித்துள்ள P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்குமாறும், வார்டு எண்.15ல் முறைகேடாக குடியிருப்புகளுக்கு மேற்கொள்ளப்பட்ட வரிவிதிப்பை முறையற்றதாகக் கருதி நீக்குமாறும், மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான தொழில்வரியை பிடித்தம் செய்யாமல் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ள முன்னாள் மற்றும் இந்நாள் செயல் அலுவலர்களிடமிருந்து அதற்கான தொகையை பிடித்தம் செய்து அதன் வருவாயை பேரூராட்சி கணக்கில் சேர்த்திடவும் விசாரணை மேற்கொண்டு உரிய ஆணைகளை பிறப்பிக்குமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 31.1.2020 நாளிட்ட விளக்க அறிக்கையில் திருமலையான் காம்ளெக்ஸ் கட்டிட உரிமையாளர் திருமதி. ஈஸ்வரி என்பவர் சுமார் 30 வருடங்களாக வணிக கட்டிடத்திற்கான உரிமம் பெற்று சொத்துவரி செலுத்தி வருகிறார் என்றும், கட்டிடத்தின் பழைய வரிவிதிப்பு எண்.4680 (புதிய வரிவிதிப்பு எண்.5207) மேற்படி கட்டிடத்தில் மருத்துவமனை ஏதும் அமைக்கப்படவில்லை. அவ்விடத்தில் சிறிய அளவிலான சிகிச்சையகம் (Clinic) மட்டுமே உள்ளது தல ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் பெயரில் தொழில்வரி 2017–2018 வரை செலுத்தப்பட்டுள்ளது.

மருத்துவர் ராஜேஸ்வரன் தொழில்வரி ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்), சிகிச்சையகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் திரு. ச. கருணாநிதி மற்றும் ஆர். சந்திரா ஆகியோர் தலா ரூ.272/– (ரூபாய் இருநூற்று எழுபத்ரெண்டு மட்டும்) செலுத்தியுள்ளனர். கடந்த 2018–2019ல் சொத்துவரி சீராய்வு பணியின் காரணமாக தொழில்வரி வசூலிக்க இயலவில்லை என்றும், 2019–2020ஆம் ஆண்டிற்கான தொழில்வரி மருத்துவர் ராஜேஸ்வரன் ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்), சி. சுரேகா, ஆர். தமிழ்செல்வி, எல். சர்மிளா, ஆர். சுமதி மற்றும் எஸ். ஜெயந்தி ஆகியோர் தலா ரூ.370/– (ரூபாய் முன்னூற்றெழுபது மட்டும்) மற்றும் ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் மருத்துவர் மற்றும் சிகிச்சையகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தொழில்வரி மொத்தம் ரூ.4,350/– (ரூபாய் நான்காயிரத்து முன்னூற்றைம்பது மட்டும்) செலுத்தியுள்ளார்கள் என்றும் தெரிவிததுள்ளார்.

3. P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் கைக்கோளர் தெருவில் வசித்துவரும் (1) திரு. ஜெகநாதன், த/பெ. ஆறுமுகம் புதிய வரிவிதிப்பு எண்.7011 (பழைய வரிவிதிப்பு எண்.6370), புதிய வரிவிதிப்பு எண்.7012 (பழைய வரிவிதிப்பு எண்.6371), (2) திரு. ராஜேந்திரன், த/பெ திரு. ராமசாமி, புதிய வரிவிதிப்பு எண்.7004 (பழைய வரிவிதிப்பு எண்.6366), புதிய வரிவிதிப்பு எண்.7008 (பழைய வரி விதிப்பு எண்.6367) (3) திரு. மாரிமுத்து, த/பெ. ஆறுமுகம், புதிய வரிவிதிப்பு எண்.7018 (பழைய வரிவிதிப்பு எண்.6377) புதிய வரிவிதிப்பு எண்.7019 (பழைய வரிவிதிப்பு எண்.6378) (4) திரு. கனகசுந்தரம் புதிய வரிவிதிப்பு எண்.7028 (பழைய விதிப்பு எண்.6389) மற்றும் (5) திரு கருணாநிதி, த/பெ ஆறுமுகம், புதிய வரிவிதிப்பு எண்.7016 (பழைய வரி விதிப்பு எண்.6375), கருணாநிதி மனைவி கிருஷ்ணவேணி பெயரில் உள்ளது) ஆகியோர், பேரூராட்சி அலுவலகத்திலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வரி செலுத்திவருகின்றனர் என்றும், அந்த ஆவணங்களின் நகல்களையும் தமது அறிக்கையுடன் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

4. P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 06.09.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 25.08.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. M. ராஜசேகரன் 6.9.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் 6.9.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

“பரமத்தி வேலூர் பேரூராட்சியில் உள்ள திருமலையான் காம்ளெக்ஸ் உரிமையாளரிடம் பேரூராட்சியின் மூலம் சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டிடம் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். கட்டிடத்தின் பரப்பளவு சுமார் 956 சதுர அடியாகும். பேரூராட்சியில் உள்ள கணினிப் பதிவேட்டின்படி அக்கட்டிடத்திற்கான சொத்துவரி 1.4.2020 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட கட்டிடத்தில் மருத்துவமனை ஏதும் அமைக்கப்படவில்லை. மாறாக சிறிய சிகிச்சை மையம் (Clinic) மட்டுமே உள்ளது. கிளினிக்கில் உள்ள மருத்துவர், செலிலியர் மற்றும்

சிகிச்சையகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. அதே போன்று ஆர்.எஸ். மெடிகல் சென்டரில் பணிபுரியும் பணியாளர்களிடமும் பேரூராட்சியால் தொழில்வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தின்முன் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு அமைந்திருக்கும் கல்வி நிலையத்திற்கு (study centre) தொழில்வரி விதிக்கப்படவில்லை. மேற்கண்ட கல்வி நிலையத்திற்கு தொழில்வரி விதித்திட தேவையான நடவடிக்கையை உடன் எடுத்திட இம்மன்றத்தில் உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட சொத்துவரி விதிப்பு மற்றும் தொழில்வரி விதித்ததற்கான இரசீதுகளின் நகலினை இம்மன்றத்தின்முன் சமர்ப்பிக்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

5. P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள **6.9.2021** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திருமலையான் காம்ளெக்ஸ்:

திருமலையான் காம்ளெக்ஸ் கட்டிடம் திருமதி. ஈஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது. இக்கட்டிடம் சுமார் **30** வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டு, வணிக பயன்பாட்டிற்கான (பழைய வரிவிதிப்பு எண்.**4680**, புதிய வரிவிதிப்பு எண்.**5207**) சொத்துவரியை செலுத்திவருகிறார். மேலும் அவ்விடத்தில் நாவல் ஆர்த்தோ கேர் சென்டர் என்ற மருத்துவ சிகிச்சையகம் (clinic) உள்ளது. இதில் படுக்கையறை வசதிகள் ஏதுமில்லை. மருத்துவ ஆலோசனைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கட்டிடத்தில் தேநீர் கடை, அழகு நிலையம் மற்றும் பல்கலைக்கழக அலுவலகம் இயங்கிவருகிறது. மேலும் இக்கட்டிடத்தின் சொத்துவரி கணக்கீட்டுப் படிவம் மற்றும் அதன் ரசீதுகளின் நகல்களையும் வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர்:

ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் கட்டிடம் திரு. ந. சத்தியமூர்த்தி, அ.மோகனபிரியா ஆகியோர் பெயரில் வேலூர் பேரூராட்சி கட்டிட வரைபட மூ.மு.எண்.**148/2017**, நாள் **31.03.2017**ன்படி அனுமதி பெற்று வணிகம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் கட்டியுள்ளனர். மேற்படி கட்டிடத்திற்கு ந.க.எண்.**148/2017**, நாள் **02.09.2020**–ன்படி வரிவிதிப்பு செய்து, வணிக வரிவிதிப்பு எண்கள்.**9116**, **9117** மற்றும் குடியிருப்பு வரிவிதிப்பு எண்கள்.**9118**, **9119**இன் மூலம் சொத்துவரி செலுத்திவருகின்றனர். மேலும் இம்மருத்துவமனையின் மருத்துவர் மற்றும் பணியாளர்கள் **2019–2020** மற்றும் **2020–2021**ஆம் ஆண்டிற்கான தொழில்வரியை செலுத்தியுள்ளார்கள். இதில் படுக்கையறை வசதிகள் ஏதுமில்லை. மருத்துவ ஆலோசனைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இக்கட்டிடத்தின் சொத்துவரி கணக்கீட்டுப் படிவம், வரைபட அனுமதி மற்றும் ரசீதுகளின் நகல்களையும் P.வேலூர் செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

வரிவிதிப்பு விவரம்:

பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**15** கைக்கோளர் தெருவில் சட்டத்திற்கு புறம்பாக வீட்டு உரிமையாளர்கள் இல்லாமலேயே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தமது

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஐந்து நபர்களும் அவர்கள் வசித்துவரும் கட்டிடங்களுக்கு சுமார் 30 ஆண்டுகளாக சொத்துவரி செலுத்தி வருகின்றனர். இவர்களது பத்திர ஆவணங்கள் மற்றும் பட்டா ஆகியவற்றின் நகல்களையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கை, 6.9.2021 அன்றைய நேரடி விசாரணையின்போது அவர் அளித்துள்ள வாக்குமூலம் மற்றும் அன்றே செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட கூடுதல் அறிக்கை, ஆவணங்கள் சொத்துவரி ரசீதுகள், மனைவரி பட்டா சான்று நகல்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டரில் மருத்துவமனை ஏதும் இயங்கவில்லை. மருத்துவ ஆலோசனைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதில் படுக்கையறை வசதிகள் ஏதுமில்லை. இக்கட்டிடத்திற்கு P.வேலூர் பேரூராட்சி கட்டிட வரைபட மூ.மு.எண்.148/2017 நாள் 31.03.2017ன்படி முறையான அனுமதி பெற்று வணிகம் மற்றும் குடியிருப்பு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
- கட்டிடத்திற்கான சொத்துவரி கணக்கீட்டுப் படிவம், வரைபட அனுமதி மற்றும் இரசீதுகளின் நகல்கள் P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு பார்வையிடப்பட்டுள்ளன
- ஆர்.எஸ். மெடிக்கல் சென்டர் மருத்துவர் மற்றும் பணியாளர்கள் 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டிற்கான தொழில்வரியை பேரூராட்சிக்கு செலுத்தியுள்ளார்கள்
- மேலும், ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் கட்டிடத்தில் இயங்கிவரும் கல்வி நிலையத்திற்கு (Study Centre) தொழில் வரி விதிக்கப்படவில்லை என்றும், தொழில்வரி விதித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் உறுதியளித்துள்ளார்.
- P.வேலூர் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள திருமலையான் காம்ளெக்ஸ் கட்டிடத்தில் இயங்கிவரும் நாவல் ஆர்த்தோ கேர் சென்டரிலும் மருத்துவ சிகிச்சையகம் (Clinic) மட்டுமே இயங்கிவருவதாக P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டிடத்தின் பரப்பளவு 956 சதுர அடியாகும். இக்கட்டிடத்திலும் படுக்கையறை வசதிகள் ஏதுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ ஆலோசனைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறதாக அறியப்படுகிறது.
- திருமலையான் காம்ப்ளெக்ஸ் கட்டிடம் 30 வருடங்களுக்கு முன்பே கட்டப்பட்டு, அக்கட்டிட உரிமையாளர்களால் சொத்துவரி பேரூராட்சி கணினிப் பதிவேட்டின்படி

1.4.2002 முதல் செலுத்தப்பட்டு வருகிறது என்று P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலத்தின்படி தெளிவாகிறது.

- ❖ மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் கோரிய விவரங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பதிலில் ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் மற்றும் திருமமலயான் காம்ளெக்ஸ் ஆகிய இரு கட்டிடங்களுக்கும் தவறுதலாக ஒரே வரிவிதிப்பு எண்.4198 என வழங்கப்பட்டுவிட்டதாகவும், ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டர் கட்டிடத்திற்கான சரியான வணிக வரிவிதிப்பு எண்கள்.9116, 9117 மற்றும் திருமலையான் காம்ப்ளெக்ஸ் கட்டிடத்திற்கான வரிவிதிப்பு எண்.5207 என்றும் P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரது 6.9.2021 நாளிட்ட அறிக்கையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.
- ❖ திருமலையான் காம்ப்ளெக்ஸ் கட்டிடத்தில் இயங்கிவரும் சிறிய கிளினிக்கில் உள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் சிகிச்சையகத்தில் பணிபுரியும் பணியாளர்களால் தொழில்வரி செலுத்தப்பட்டுள்ளது அதற்கான ஆதார இரசீதின்படி உறுதியாகிறது.
- ❖ P.வேலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 15–ல் கைக்கோளர் தெருவில் வசித்துவரும் மனுதாரரின் புகால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 5 குடியிருப்புதாரர் திரு. ஜெகநாதன், (2) ராஜேந்திரன் (3) மாரிமுத்து (4) கனகசுந்தரம் மற்றும் (5) கிருஷ்ணவேணி ஆகியோர் கட்டிடங்களுக்கான சொத்துவரியை 30 ஆண்டுகளாக செலுத்தி வருகின்றனர் என்று P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளதோடு அதற்கு வருவாய்த்துறையினால் வழங்கப்பட்டுள்ள மனைவரி தோராயப்பட்டா மூலமும் உறுதிசெய்யப்பட்டுள்ளதால், இதில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை என்பது தெளிவாகிறது

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. M. ராஜசேகரனால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஏதும் நிரூபணமாகவில்லை என்பது P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி உறுதியாகிறதென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், மனுதாரர் தமது குற்றச்சாட்டுகள் குறித்த ஆதாரபூர்வமான ஆதாரங்களை/வாதங்களை அளித்திட அவரை இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி வாக்குமூலங்களை அளித்திட போதிய அவகாசம் அளித்து அழைப்பாணை அனுப்பப்பட்ட நிலையிலும், அவர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. எனவே, தமது புகார் மனு மீது போதுமான ஆதாரங்கள் ஏதும் மனுதாரரிடம் இல்லையென்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், P.வேலூர் பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் வழங்கப்பட்டுள்ள தகவல்களின்படி P.வேலூர் பேரூராட்சி பகுதியில் இயங்கும் ஆர்.எஸ்.மெடிக்கல் சென்டருக்கு சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே வணிகக் கட்டிடத்திற்கான அனுமதி எஸ். ஈஸ்வரி என்ற பெயரில் வழங்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டு செலுத்தப்பட்டுவருகிறதென்றும் திருமலையான் காம்ப்ளெக்ஸ் கட்டிடத்திற்கும் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே வணிக கட்டிடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டு, வரிவிதிப்பு செய்யப்பட்டு செலுத்தப்பட்டு

வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014, பிரிவு 10(3) (c)ன்படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது என்பதால், P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது அறிக்கை, வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அறிக்கப்பட்ட கூடுதல் அறிக்கை, ஆவணங்கள், வரைபடஅனுமதி, தொழில்வரி, சொத்துவரி, குடியிருப்பு ஆதாரங்களுக்கான பட்டா ஆகியவற்றின் அடிப்படையில், இம்முறையீட்டு மனு மீதான விசாரணையை இத்துடன் முடித்துவைக்கலாமென முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

பேரூராட்சியின் வருவாயை கருத்திற்கொண்டு தொழில்வரி வசூலில் எந்தவித விடுபாடுமின்றி பேரூராட்சி செயல்பட அறிவுறுத்தப்படுகிறது. அதேபோன்று சொத்துவரி விதிப்பில் விடுபாடின்றி இருப்பதை செயல் அலுவலர் உறுதிசெய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. திட்ட ஒப்புதல் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு தற்போது செயல்பாட்டில் இருக்கும் விதிமுறைகளைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கவும் அறிவுரை வழங்கப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. M. ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு,பொத்தனூர் மற்றும் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்–638 181.
செயல் அலுவலர்,
P.வேலூர் தேர்வுநிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்–638 182

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளருக்காக
3.12.2021